செ.வெ.எண்:194 நாள்:20.03.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் சாலைகளில் Cage Wheel –கள் பொருத்தப்பட்ட ட்ராக்டர் வாகனங்களை இயக்க கூடாது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---------------------------------

திருநெல்வேலி மாவட்டத்தில் சமீபகால அன்றாட சாலைபயன்பாட்டில், வயல்வெளியில் விவசாயத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டிய Cage Wheel –கள் பொருத்தப்பட்ட ட்ராக்டர் வாகனங்களை, பொதுச்சாலையில் பெருமளவில் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. இது பொது உபயோக சாலைகளில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், அதன் பராமரிப்புச் செலவினங்களையும் அதிகரிப்பதுடன் சில நேரங்களில் சாலைவிபத்துக்கள் ஏற்படவும் காரணமாகி விடுகிறது.

இதனை முழுவதுமாக தவிர்க்கும் வகையில், மாவட்டத்தில் விளைநிலங்களில் பயன்படுத்தும் பொழுது மட்டுமே Cage Wheel–கள் பொருத்தப்பட்ட ட்ராக்டர் வாகனங்களை இயக்க வேண்டும். பொதுச்சாலையில் ரப்பர் உருளை (டயர்) பொருத்தப்பட்ட நிலையில் மட்டுமே ட்ராக்டர்களை கண்டிப்பாக இயக்கப்பட வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனை மீறும் நபர்கள் மீது மோட்டார் வாகனச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி